சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 392/2015**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
வாக்குமூலம் – பி.வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜ் | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | தாராபுரம் | நாள் | : | 23.02.2024 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆண்டு பிப்ரவரி 23ம் நாள் சாட்சியம்.

---

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி துரைசாமி தடம் இல்லை என்று எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்கள் குளத்துப்பாளையம் கிராத்தில் ரீசர்வே எண். 266/3 காலையில் அமைந்துள்ளது. மேற்படி காலையில் வாதிக்கும் எனக்கும் தலா 77–1/2 செண்ட் பூமி பாத்தியம் உண்டு. வாதிக்கு உரிய 77–1/2 செண்ட் பூமியைப் பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நான் எனது சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்பு நேரில் சென்று பார்வையிட்டேன். வாதி தனக்கு பாத்தியப்பட்ட 77–1/2 செண்ட் பூமியில் தென்புறமாக செங்கல் சூலை வைத்து நடத்தி வந்தார் என்றால் நான் கிரையம் வாங்கும் போது இல்லை அதற்கு முன்னர் நடத்திவந்திருக்கலாம்.

2. 17.07.2015 தேதியில் நான் எனது சொத்தினை கிரையம் வாங்கினேன். எனது கிரைய ஆவணத்தில் துரைசாமியின் பங்கில் வண்டி வாகனங்கள் போய்க்கொள்ளலாம்

என எழுதப்பட்டுள்ளது, வாதியின் ஆவணத்திலும் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் 5ம் பக்கத்தில் மேற்படி காலையில் உள்ள எம்.ஆறுமுகம் அவர்களின் பூமியில் கிழக்கோட்டில் தென்வடலாக நடந்து கொள்ளும் வழி நடை தடபாத்தியங்களும் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம், மேற்படி ஆறுமுகத்திடம் இருந்து தான் வாதி கிரையம் பெற்றுள்ளார்.

3. நான் கிரையம் வாங்கிய தேதியில் ஆறுமுகத்திற்கு வழக்கு சொத்திலோ அல்லது நான் கிரையம் பெற்ற சொத்திலோ எந்த பாத்தியமும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேனா என்றால் 77–1/2 செண்ட் கிரையம் வாங்கும் விபரம் தெரியும் முழுமையாக படித்து பார்க்கவில்லை. தடத்தின் நீள அகலம் எதுவும் குறிப்பிட்டு எழுதப்படவில்லை வண்டி வாகனங்கள் போய்க்கொள்ளலாம் என எழுதப்பட்டுள்ளது. எனது பூமியை நான் கிரையம் பெற்ற உடன் வாதி வழக்கு தாக்கல் செய்துவிட்டார் என்றால் ஆமாம்.

4. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட விபரத்தை நான் தெரிந்த கொண்டேன் நான் உடன் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 20 அடி தடம் குறிப்பிட்டு எழுதியுள்ளதாக சொன்னார்கள் நான் பார்க்கவில்லை. வழக்கறிஞரிடம் கேட்டு நான் அறிக்கையை பார்க்கவில்லை என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் வாதி தனது பூமியில் செங்கல் சூலை நடத்தி வருவதாகவும், வீடு கட்டியுள்ளதாகவும், குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்றால் மேற்படி வாதியின் இடத்திற்கும் தடத்திற்கு சம்மந்தமில்லை.

5. எனது பூமிக்கு நான் தற்போது எவ்வாறு சென்று வருகிறேன் என்பதால் வழக்கு நிலுவையில் இருப்பதால் தடம் குறித்து பிரச்சனை ஆகும் என்பதால் நான் சென்றுவருவதில்லை. வாதி பூமியில் தற்போது தடம் இல்லை என்றால் நானும் நடப்பதில்லை வாதியும் நடப்பதில்லை புல் பூண்டு முளைத்து உள்ளது. வாதி பூமியில் ரோட்டிற்காக நிலம் எடுத்தது போக மீதமுள்ள பூமியினை வாதி மட்டுமே அனுபவம் செய்து வருகிறார் மேற்படி வாதி பூமியில் எந்த தடமும் இல்லை என்றால் சரியல்ல. எனது பூமியை கிரையம் பெறுவதற்கு முன்னர் அந்த தடத்தில் சென்று பார்த்து தான் கிரையம் பெற்றேன் பின்னிட்டு நான் அங்கு செல்லவில்லை.

6. வாதி தனது பூமியில் தடம் இல்லை என வழக்கு தாக்கல் செய்துள்ளார் நீதிமன்ற ஆணையரும் தடம் இல்லை என அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் எனது தரப்பில் வாதி பூமியில் தடம் உள்ளது என்பதை காண்பிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் வழக்கு நிலுவையில் உள்ளதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் சொல்வது போல் நிலையில் தடம் இல்லை ஆவணங்களில் மட்டும் தான் தடம் எழுதப்பட்டுள்ளது நடைமுறையில் தடம் அனுபவத்தில் இருந்திருந்தால் அதனை காண்பிக்க நீதிமன்ற நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

7. எனது ஆவணத்தில் யார் பூமியில் என்ன அளவில் தடம் உள்ளது என்ற விபரங்களை குறிப்பிட்டு சொல்லாமல் பாதியம் இல்லாத நபரை குறிப்பிட்டு நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பூமிக்கு வாதியின் பூமியில் தடம் இல்லை வாதி பூமியில் தடம் இருப்பதாக பிரச்சனை செய்ததால் தான் வாதி என் மீது

வழக்கே தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல தடம் உள்ளது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒம்/–Ms.மதிவதனி வணங்காமுடி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.